உ

சிவமயம்

குருபாதந்துணை.

# திருப்பனந்தாள்

ஸ்ரீ சடையப்பர்மாலை.

பெரியநாயகிமாலை.

...னதேசிகர்போற்றிக்கலிவெண்பா.

ஞானசம்பந்த தேசிகர்மாலை.

...கப்பொருள் நவமணிக்கோவை.

---

இவை

...ருக்கைலாய பரம்பரைத் தருமபுராதீனம்
...டியார் குழாங்களு ளொருவராகிய ஸ்ரீமத்
சண்முகசுவாமியவர்களாலியற்றி
...ருப்பனந்தாள் காசி மடாதீனபதி காசிவாசி
...ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரசுவாமிகள் ஆக்ஞைப்படி

---

நாகபட்டணம்
...னிஅச்சுக்கூடத்திற்" பதிப்பிக்கப்பட்டன.
விகாரி-வருடம் புரட்டாசிமீ

1616

உ

சிவமயம்.

# திருப்பனந்தாள்

# சடையப்பர்மாலை

## காப்பு

பூவார் பொழிற்பனசைப் பொற்சடையப்பர்புகழைப்
பாவார் தமிழ் மாலைபாடுதற்கு—காவாரப்
பூண்டமதுர மொழிப் பூரிக்கு நாயேனை
யாண்ட பிள்ளையார் பொன்னடி.

## நூல்.

1. கலைவளர்மதியுங்கடுக்கையும்பாம்புங்
    கவினுறுநதியையுமிலைந்த
தலைவளர்நினதுதிருவுருவோடுக்
    தமியனேன்காணவந்தருள்வாய்
முலைவளர்மடவார்சூழ்ந்திடும்பனசை
    முதற்பெரும் பதியினிலிமய
மலைவளர்பெரியநாயகிமகிழ
    வாழ்சடையப்பநாயகனே

2. செகமுறுசரமுமசரமுமியாவுஞ்
சிறந்திடப்படைத்தளிப்போரு
நகமுறுமனமுமேனமுமாயு
நண்ணருமுமையவளோடும்
யுகமுறுவினதுதரிசனந்தருவா
யூபமார்பனசையிற்செழியன்
மகமுறும்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

3. புதுவையார்வேலின்மிளிர்விழிச்செவ்வாய்ப்
புரிகுழற்றொடைகைசாத்துந
கதுவையார்மாலைதனக்குநீருணிந்த
காரணமெவனெனக்கருள்வாய்
மதுவையார்பொழிலுந்தடங்களுஞ்சூழ்ந்து
மல்கியபனசையின்மருவி
வதுவையார்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

4. பரமொளிர்சோழனூற்பெரும்படையிற்
பருவடம்பூட்டிமுன்னீர்த்துந்
திரமொளிர்நினதுதிருவுருக்கலையர்
திகழ்தரநிமிர்த்ததென்சொல்லாய்
கரமொளிர்கதிர்களேழ்நிலைமாடங
கடப்பரிதாகிநிற்பனசை
வரமொளிர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே

5. நடையணிமேவுநாககன்னியரி
னண்ணுறுநற்பூசனையேற்றுப்

படையணிமேவுஞ்சோழனன்மணத்தைப்
பரிவின்முன்னளித்தமைபோலக்
கடையணியடியேன்கதிமணமடையுங்
கவினருள்பனசையிலருளின்
மடையணிபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே

6. கடுவமர்களமுமலரடித்தளமுங்
கவினுறுமான்மழுக்கரமும்
வடுவமர்விழியாள்பாகமும்வினையேன்
வாழ்த்தவந்தின்னருள்புரிவாய்
நடுவமர்கலையார்நடம்புரியரங்க
நண்ணுநற்பனசையிலருளா
மடுவமாபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

7. அகரம்போலுயிர்களகந்தொறும்விளங்கி
யவ்வவைசெய்வினைக்கிசையத்
தகரமாரரம்பைபோகமுநாருந்
தந்தளிப்பவவெமையாளவாய்
சிகரமார்கொடிகளிரவிதேரோட்டிச்
சிறந்தநற்பனசையிலணியு
மகரமார்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

8. காவமர்கடுக்கைமிலைந்தநின்முடியைக்
கண்டனனெனப்படிறுரைத்த
பூவமர்மீதவும்பொய்க்கரிபுகன்ற
பொலன்மடற்கைதையுநின்றுஞ்

நேவமர்பூசையின்றெனச்சாப
நிகழ்ந்ததைநீக்கிநற்பனசை
மாவமர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

9. கானமர்கூந்தற்குயின்மொழிச்செவ்வாய்க்
கயற்கணார்மலைமகளன்பால்
தேனமர்மலரிணுகமநெறியிற்
றேர்ந்துனைப்பூசைமுன்னுஞற்றத்
தானமர்ந்தன்பிற்றிருமணம்புணர்ந்தாய்
தமியனேற்கருடிருப்பனசை
மானமர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

10 செல்கருமேனிச்சூரனுல்வலிய
சிறைசெயமிகவுளமெலிந்து
பல்கணியமரர்பணிந்துனைவேண்டப்
பாறுசூழ்வேலனையளித்துப்
புல்கவற்கொன்றின்னருளபுரிந்தாண்டாய்
பூரியேன்றனக்கருள்பனசை
மல்கருட்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

11. குலமிகுன்னடியார்கூட்டுறவறியேன்
கூட்டுறவறிந்தவர்பாதம்
நலமிகுமலர்தூய்த்தொழுதிடவறியா
நலமிலேன்றனக்கருள்செல்வர்
இலமிகுமறுகிற்றானநீரோடி
யேர்வளம்பெருக்குநற்பனசை

வலயிகும்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

12. காமமார்குழலாரல்குலாமரவின்
கடிவிடமயல்கடந்தவர்க்கே
தாமமாமெமதுதிருவடிமுத்தி
தருதுமென்றுரைத்தருணீயே
சேமமார்தனதுபாகமுஞ்சிரமுந்
தெரிவையர்க்களித்ததென்பனசை
வாமமார்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

13. கருவமர்பவமங்கடலினின்மூழ்கிக்
கடும்புலமுதலையுமிழுக்க
உருவமாமாதருங்கியாஞ்சுழியி
னுளைந்திடுவேலைநல்லருளாற்
றிருவமர்தனதுதிருவடிப்புணையைத்
தெரிக்களித்தானிருப்பனசை
மருவமர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

14. குயிலியன்மொழியார்குறங்கெனவிரண்டாய்க்
கூடியவாழையினடியிற்
றுயிலியலல்குலரவினுற்றீண்டித்
துயர்மடற்கொண்டிடாதென்னைப்
பயிலியல்தனதுதிருவடிவீட்டிற்
பதிவுறவைத்தருள்பனசை
மயிலியற்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

15 தாழ்வமர்கூந்தற்றையலார்வரிசேர்
சக்கெனும்வாளிறலெதிர்ந்து
போழ்வமர்ந்தெனதுமனமுடையாது
பொருவருநன்னிலையருள்வாய்
ஏழ்வளநிலையுண்மாதர்தம்மியலை
யிமையவர்பார்த்தணைபணசை
வாழ்வமர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

16. குணங்கடந்தருவாய்நின்றருணீயே
குணமிலேழுய்ந்திடவதனைத்
தணந்தருண்மேனிகொடுவுமைபாகஞ்
சார்ந்திவண்வந்தனையதனற்
கணம்புகழ்நினதுதிருவடியடைந்தேன்
கடையனேற்கருடிருப்பணசை
மணகமழ்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

17. கனமமர்மேனிமாலயன்வெள்ளைக்
கயமரிரவிமதிவானோ
ரினமமர்கும்பயோனிநற்சேட
ணிவாகனின்பூசனையியற்றி
மனமமர்பேறுபெற்றமைகேட்டுன்
மலரடியடைந்தனன்பனசை
வனமமர்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே

18. மதனவல்லிடும்பைநீக்கிநற்ஞானில்
வதிந்தியல்காலினையடக்கிப்

பதனமர்யோகுபயின்றெவனினது
பதமலர்போற்றிடவறியார்
புதனமர்மாடப்பனசையின்மதியும்
பொன்னிறமேய்ந்திடிலொக்கும்
வதனநற்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே

19 குளந்திகழ்விழியுங்குயிலியன்மொழியாள்
கூடியபாகமும்வாரிக்
களந்திகழ்களமுங்காலனைக்காய்ந்த
கழலுநற்கருணையுங்கடையே
னுளந்திகழ்ந்திடநீயெழுந்தருள்புரிவா
யூரினிற்சிறந்தநற்பனசை
வளந்திகழ்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

20. நரைதிரைமூப்புச்சாவினானலியு
நலமிலாப்பவமெனுங்கடலிற்
புரையுறவீழ்ந்துபுலம்புபுற்பசுவைப்
புகழ்ந்திடாதவைகளையியக்கும்
பரைமகிழ்பதியாநிற்புகழ்கூறும்
படியருள்பனசையிலிமய
வரையருள்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

21. ஈசனேயடியரிருவினைநீக்கி
யின்கதிசேர்த்தருள்பாவ
நாசனேமறைகணான்கினும்விளைந்து
நல்லருட்பிழம்பெனவாழும்

போசனேயடியேன்புரைமலந்தீர்த்தாள்
புகடவர்சூழ்ந்திடும்பனசை
வாசனேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே

22 நல்லனேகயிலைநாதனேவனுக்கண்
ஞானனேநறும்பொலன்மேரு
வில்லனேவனகவேதனேயன்று
விசயனேரணைந்தமர்செய்த
மல்லனேயடியேன்றனக்கருள்செய்வாய்
மாவுறும்பனசையில்வாழும்
வல்லனேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

23. தந்தையேநால்வர்க்கன்றெழின்ஞானந்
தந்தையேமாலயனரறகு
முந்தையேவுயிர்களனைத்துளுமிருந்து
மூந்தையேமுனிவர்கள்மனம்வாழ்
சிந்தையேயடியேன்றீவினையாவுஞ்
சிந்தையேபனசையில்வாழ
வந்தையேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

24. திண்ணனேவசுரர்முப்புரமெரித்த
தீரனேதிகழ்ந்திடுநெற்றிக்
கண்ணனேகண்ணற்காழியீந்தருளுங்
கடவுளேமாலயன்கருத்தி
னெண்ணனேயடியேற்கின்னருள்செய்வா
யிசையுறும்பனசைவாழந்தி

வண்ணனேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

25. பொள்ளலேபொருந்துட்புழுமலயாக்கை
புகுந்துமாவுடன்பெருங்குடும்ப
வள்ளலேயழுந்தியலைவுறுதென்னை
யாண்டனைதருட்கழல்பணிய
உள்ளலேயருள்வாய்தசமுகற்கிரங்கி
யுயர்ந்தநல்வரந்தருபனவச
வள்ளலேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

26. சரதனேயரவும்புலியுநற்பிடியுந்
தரிசிக்கச்சபையினடித்த
பரதனேபதியேபகைவரூரெரித்த
பன்மதியாழிசேர்வைய
விரதனேயடியேற்கிரங்கிநற்கதியை
யீந்துநற்பனசையில்வாழும்
வரதனேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே,

27. சுத்தனேபிள்ளைக்கறியுகல்வேட
னெச்சிலுஞ்சுகமெனவுண்ணும்
பித்தனேயமரர்பலத்தினைச்சிறிய
துரும்பினாற்பிறங்கிடத்தெரிக்குஞ்
சித்தனேயடியேன்சிவம்பெறவருளவாய்
சிறந்தநற்பனசையில்வாழு
மத்தனேபெசியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

௨௮ பாணனேயெழுந்தேயருணரசிலைகப்
பாணனேயயன்சிரமகொய்த
வெணனேபுரமுஞ்சிரங்கரஞ்சேர்த்த
வேணனேவுமையவளபோற்று
மாணனேயணியுநரவிசேர்சாந்த
வாணனேயருடிருப்பனசைச்
வாணனேபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

29. இனந்திகழ்மலரும்வில்லமுங்குழையு
மினையந்தநன்னுவியுஞ்சாந்து
மனந்திகழ்கமலப்பாத்தரமாவி
னஞ்சுமஞ்சமுதமுங்கொண்டு
முனந்திகழன்பிற்பூசைசெய்தவர்போன்
முன்னவிர்மன்ணிசூழ்பனசை
வனந்திகழ்பெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

30. நயந்தரும்வேதமாகமம்யாக
நன்மைசாலந்தணர்வாழ்க
பயந்தருமேகநகண்டிகைநீறும்
பசுநிரைவேந்தரும்வாழ்க
செயந்தருதிருமைவாழ்குருயரனுந்
தெண்புனற்பனசையும்வாழ்க
வயந்தருபெரியநாயகிமகிழ
வாழ்சடையப்பநாயகனே.

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# திருப்பனந்தாள்

# பெரியநாயகிமாலை.

---

## விநாயகர் காப்பு.

### கலித்துறை.

கல்மார்பனைசைநகர்வாழ் பெரியநன்னாயகிமேற்
பலமார்தமிழினற் பாமாலைசூடப் பயோதரம்போற்
குலமாரருளையடியேனகத்திற் குறைவறப்பெய்
வலமார்சடையாரருளாண்ட தும்பியை வாழ்த்துவனே.

## நூல்.

1. சங்கார்கரமுந்திருவாருரமுமுன்னோங்கியமால்
தங்காயடியனவினைதீரத்தருளெழிருங்கும்வரை
மங்காய்மதிச்செஞ்சடையப்பதேவன்மகிழ்ந்தணையு
நங்காய்பனைசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

2. அன்றேரிமையவரைமகவாகியமர்ந்தவருட்
குன்றேயடியன்வினைதீர்த்தருளெழிற்கூத்துகந்து
மன்றேப்பரமன்மகிழ்காமவல்லிமெய்மாதவர்சூழ்
நன்றேய்பனைசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

3. சந்தார்தடமூலைத்தாடகைசாத்துநற்குரிசினைமுன்
ணிந்தார்மணிமுடிசாய்த்தணியுஞ்சடையீசன்மகிழ்
பந்தாமெனுமுலைப்பாவாயடியன்பணியுகந்தாள்
நந்தார்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

4. நாரார்பனசைவலைதீர்ந்தடியர்கணற்கதியை
நாரார்பனசைமலர்தூய்த்தொழுதுமுனன்னவருள்
நாரார்பனசைவலமாமெனுக்குழல்நங்கைமுன்வா
நாரார்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

5. கண்ணுமணியுமணியாடுபாவையுங்காண்பகலும்
விண்ணும்புனலுநல்வாயுவும்பாருமிளிரனலும்
பண்ணும்பதியுநல்லானுமாவுமாகிப்பரந்தென்முனம்
நண்ணும்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

6. புத்தூரும்வல்லம்புலியூருமாசடைப்புண்ணியனார்
சித்தூருமாதவர்சேர்நதூர்கயிலைச்சிகரம்விட்டுப
பித்தூரடியனுளத்தூரில்வந்துபிறங்கியதேன
நத்தூர்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

7. மாடும்பொருளுநன்மக்களும்மாதரும்வாழ்மனையுந்
தேடுநிலமுந்திரமல்லவென்றுனைத்தேர்ந்தவர்
பாடும்பரிசறிந்துன்பாதபங்கயம்பாடவருள்
நாடும்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

8. கல்லாமனத்துக்கடையேனையாண்டுகருணைசெய
வல்லாயென்றுன்பதம்வந்தடைந்தேன்வினைமாற்றிடுவாய்
செல்லாங்குழல்மலர்ச்செவ்வாய்வரைகுயச்சிற்றிடைசேர்
நல்லாய்பனசைநகர்வாழ்பெரியநன்னாயகியே.

9. காட்டுமிரவியுங்கண்ணையும்போலக்கலந்துயிரை
யாட்டும்பரமனகத்தாமரையிலழகொழுகத்
தீட்டுமுயிரினல்லோவியமேவினைதீருநெறி
நாட்டும்பனைசைநகர்வாழ்பெரியநாயகியே.

10. சுதிவாழ்கவேதநல்லாகமம்வாழ்கநற்கண்மணியுண்
பதிவாழ்கசைவத்திருநீறும்வாழ்கநறும்பாவலர்த
மதிவாழ்கவந்தணராணிரைவாழ்கநன்மணமணியெனு
நதிவாழ்பனைசைநகர்வாழ்பெரியநாயகியே.

வேறு

நத்தேறுகரத்தரியுநலமேறுமறையவனுங்காடிக்காணும்
பித்தேறுமனத்தினராய்ப்பிலமேறுககனமத்தற்கெரிதுநேடி
மத்தேறுததியாசுமதியேறுசடைமுடியர்மகிழ்ந்துசேரும்
புத்தேறும்பொழிற்பனைசைப்பெரியநாயகிமலர்த்தாள்புகழ்ந்
துவாழ்வாம்.

முற்றிற்று.

---

இந்த ஸ்தலபுராணம் தமிழிலிருக்கின்றது
சீக்கிரம் அச்சிடப்படும்.

உ

சிவமயம்.

குருபாதந்துணை.

# திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனம் சந்தானதேசிகர் போற்றிக் கலிவெண்பா.

## சாற்றுகவி.

---

மத்தியார்ச்சுனம்

சி. கந்தசாமிதேசிகரா லியற்றப்பட்டது.

---

திருமருவுகைலைபரம்பரை மெய்கண்ட
    தேசிகனற்சந்ததியிற் சிறக்குந்தன்மைக்
கருவிலுயிர்புகுதாமற் கதிபெற்றுய்யக்
    கருணைசெய்யுஞ்சந்தான குரவர்மீது
பொருவிலெழிற்கலிவெண்பாப் புனைந்தானந்தப்
    புகழ்மரபிற் சிவஞான குரவன்றன்னு
லருள்பெறுமாதவர்தம்மிற் றலைமையாகி
    யறிவின்மிகுஞ்சண்முகமா முனிவன்றானே.

---

திருஞானசம்பந்த தேசிகர் திருவடிவாழ்க.

## குருபரம்பரைத்தோத்திரம்.

---

ஒருலவுகல்லாலி னீழலமர்கைலாச
    றிருபதம் போற்றுநந்தி
யிணையடிதனைப்பரவிடுஞ்சனற்குமரர்தா
    ளொன்றுந்துதித்துலகினி
லிலகுசத்தியஞான தரிசனிகளடிதன்னை
    யேத்தும்பரஞ்சோதியா

# குருபரம்பரைத்தோத்திரம்

தெண்ணவருவெண்ணெய்மெய் கண்டார்பதத்திலன்
　　பீட்டுமருணந்திதேவர்
வாருலவுமறைஞான சம்பந்தர்சித்தாந்த
　　வழிதேருமாபதியர்சீர்
வாய்மைமுழுதுந்தெரிந் தருணமச்சிவாயர்பின்
　　வண்கழுமலத்தின்வந்து
வாழ்கங்கைமெய்கண்டர் வைக்கோலிலாப்பழுதை
　　மருவு சிற்றம்பலவர்பின்
வள்ள்லாம் ஞானப்ரகாசரருள்சேர்கமலை
　　வாழுஞானப்ரகாசர்
பாருலவு தருமையம்பதியின்வாழ்ஞானசம்
　　பந்தரிருதாளை நிதமும்
பரவுமானந்தபரவசர் சச்சிதானந்தர்
　　பரமாசிலாமணியர்தாள்
பரிஞானசம்பந்தர் திருஞானசம்பந்தர்
　　பாதிருவம்பலவர்பின்
பகருமழகியதிருச் சிற்றம்பலவரருட்
　　பணிசெய் நாவுக்கரசரே
காருலவுசிவஞான தேசிகர்சொல்சச்சிதா
　　னந்தர் முத்துக்குமாரர்
ஞானசம்பந்தர்கந் தப்பதேசிகர்
　　மாசிலாமணியர்நற்கதிவழி
நவில்சச்சிதானந்தர் மாணிக்கவ[illegible]
　　ஞட்டுதிருவருள்வம[illegible] தேசிகர்மலர்ப்பாத
கண்ணிவருசிவஞான[illegible]
　　நாடியருள் பெற்றுவாழ்வாம்.

---

திருச்சிற்றம்பலம்

# திருக்கைல[illegible]ரம்பரைத் தருமபுரவாதீனஞ்சந்தான தேசிகர் பரிபூர[illegible]மான ஸ்தலம், மாதம், பக்ஷம், திதி விபரம்.

| எண். | சந்தானகு[illegible]ர் பரமபரைத் திருநாமம். | பரிபூரண ஸ்தலம். | மாதம். | பக்ஷம் | திதி. |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீசெக[illegible]ணமூர்த்திதேவர் | இவர்கள் கைலாயவாசிகள். | | | |
| 2 | திருநந்[illegible]தேவர் | | | | |
| 3 | சனற்[illegible]மார முனிவர் | | | | |
| 4 | சத்தி[illegible]ஞான தரிசனிகள் | | | | |
| 5 | பரஞ்[illegible]சோதி முனிவர் | [ய் நல்லூர் | | | |
| 6 | [illegible]யகண்டதேவர் | திருவெண்ணெ | ஐப்பசி | சுக்கில | பிரதமை |
| [illegible] | அருணந்தி சிவாசாரியார் | துறையூர் (சி | புரட்டா | கிருஷ்ண | திரயோத |
| 8 | மறைஞானசம்பந்தர் | திருக்களாஞ்சே | ஆவணி | சுக்கில | துதியை |
| 9 | உமாபதி சிவாசாரியார் | கொற்றவன்குடி | சித்திரை | ,, | தசமி |
| 10 | அருணமச்சிவாயர் | டை | மார்கழி | ,, | பௌர்ண |
| 11 | கமலைமெய்கண்டார் | சீர்காழி | கார்த்தி | கிருஷ்ண | பஞ்சமி |
| 12 | பழுதைகட்டிச் சிற்றம்பலவர் | மதுரை | பங்குனி | ,, | நவமி |
| 13 | பழுதைகட்டி ஞானப்பிரகாச[ர் | காளத்தி | ஐப்பசி | ,, | சதுர்த்தி |
| 14 | ஞானப்பிரகாசர் | திருவாரூர் | ,, | ,, | சஷ்டி |
| 15 | ஞானசம்பந்த தேசிகர் | தருமை | வைகாசி | ,, | சத்தமி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | ஆனந்தபரவசதேசிகர் | தருமை | மார்கழி | கிருஷ்ண | திருதியை |
| 17 | சச்சிதானந்ததேசிகர் | ,, | ஆனி (சி | சுக்கில | சப்தமி |
| 18 | மாசிலாமணிதேசிகர் | ,, | புரட்டா | ,, | ஏகாதசி |
| 19 | ஞானசம்பந்ததேசிகர் | சிந்துபூர்ந்துறை | ஆவணி | ,, | துதியை |
| 20 | கருஞானசம்பந்ததேசிகர் | திருக்குற்றாலம் | சித்திரை | கிருஷ்ண | பிரதமை |
| 21 | திருவம்பலதேசிகர் | தருமை | ஐப்பசி | சுக்கில | பௌர்ண |
| 22 | அழகிய திருச்சிற்றம்பலதேசி | கோட்டூர் | கார்த்தி | ,, | ஏகாதசி |
| 23 | திருநாவுக்கரசு தேசிகர் (கர் | தருமை | ஐப்பசி | ,, | பௌர்ண |
| 24 | சிவஞானதேசிகர் | ,, | ,, | கிருஷ்ண | தசமி [மி |
| 25 | சச்சிதானந்ததேசிகர் | ,, | மார்கழி | சுக்கில | தசமி |
| 26 | முத்துக்குமாரதேசிகர் | ,, | சித்திரை | கிருஷ்ண | அஷ்டமி |
| 27 | ஞானசம்பந்த தேசிகர் | ,, | ஆவணி | ,, | ஏகாதசி |
| 28 | கந்தப்பதேசிகர் | ,, | ,, | ,, | நவமி |
| 29 | மாசிலாமணி தேசிகர் | ,, | தை | ,, | சஷ்டி |
| 30 | சச்சிதானந்த தேசிகர் | சிவசைலம் | கார்த்தி | சுக்கில | துவாதசி |
| 31 | மாணிக்கவாசகதேசிகர் | திருபுவனம் | மாசி (கை | கிருஷ்ண | சதுர்த்தி |

 

உ

திருச்சிற்றம்பலம்.

குருபாதந்துணை.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனஞ்

சந்தான தேசிகர்

# போற்றிக்கலிவெண்பா.

விநாயகர்—காப்பு.

தங்குபுகழ்சேர் தருமைச் சந்தானதேசிகர்மேற்
பொங்குகலிவெண்பாப் புகலுறவே—சங்கரிசேர்
நம்பிமுகநான்குடையா னடவருள்செயஞானத்
தும்பிமுகன்றாளே துணை.

குருபாம்பரைத்துதி.

திருவாருங்கைலாய பரம்பரையிற்சிவஞானர்
தெரிக்கும்வெண்ணெய்
மருவாருமெய்கண்டான்சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞானவள்ளலாரிக்

குருவாரும்பொழிற்றருமை வாழ்ஞானசம்பந்தக்
குரவன்கல்லாற்
றருவாரும்பரமகுரு மரபுடையோன்றிருமரபு
தழைகமாதோ.

வசையுறும்மலம்வீட்டி மாதவர்களினங்கூட்டி
மாலுங்காணு
இசையுறுந்தன்பதஞ்சூட்டி யின்பமெனும்மூதூட்டி
யெம்மைவீடா
நசையுறுந்தொட்டிவிலாட்டியளித்தருளும்
ஞானகுரு நாதனென்கு
கிசையுறுநற்புகழ்த்தருமைத் திருஞானசம்பந்தன்
றிருத்தாள்போற்றி.

---

ஞானசாரியர் துதி.

பூமேவுசவஞானப்புண்ணியர்களொருபாலிற் போற்றிநிற்பப்
பாமேவுநவஞானப் பண்டிதர்களொருபாலிற் பாடிநிற்பக் (த்
கூடமேவுமவஞானக்கொடியனேற்கருட்ருமைக்கோவாம்ஞான
தேமேவுசிவஞான தேசிகன்றுளொன்றுளுஞ்சிந்தைசெய்வாம்.

## நூல்.

### கலிவெண்பா.

1. பூமேவுநான்முகனும் பொன்னூரனுநான்மறையுங்
காமேவுவாசவனுங் காணரிய —மாமேவு

2. பூவும்புனலும் புகலனலுநற்காலுங்
கோவும்பகன்மதியுங் கொத்துயிரு—நாவுறுசொல்

3. வாக்குமனமும் வளர்மதியும்போதமுமாய்ப்
போக்கும்வரவுமில்லாப் பூரணமாய்த் —தாக்கரிய

4. வின்பமாயெங்கு மியைந்தபரபோகமுமாய்த்
தங்குந்திருவருளே தாரணியி —லெங்குமிக

5. நீக்கமறநின்றநின்மலமே நம்வினையைத் (ளெலா
தாக்கவிவண்சேர்ந்ததென்று சாற்றுதல்போன் —மாக்க

6. மூசுவடவானிழலின் முத்தருவிசேர்கைலைத்
தேசுநிகர்வெண்ணீறு சேருருவு —மாசகல

7. மின்னொளியைவீசி விரிபவளக்காடுநிகர்
பொன்னொளியைவீசும் புரிசடையுந் —துன்னுவினை

8. போயமறையோரகத்திற் பொங்குமதிபோலொளிரு
சாயமலர்வதனத் தண்மரையுந் —தூயகதிர்ச்

9. சங்கக்குழையணிக்குத் தானணியாய் மேல்விளங்கிப்
பொங்குவள்ளைநேரும் புகழ்ச்செவியுந் —தங்குமறை

10. தேறுமுனிவோரிடத்திற் சேருமலப்பகையை
நீறுசெய்யுந் தீவிழிசேர் நெற்றியுங் —கூறுமறை

11. யாய்ந்தவடியாரிடத்தி லானந்தமாயருளைப்
பாய்ந்த விருமலைநேர் பண்விழியு —மேய்ந்தமலை

12. யொன்றாகச்சேரம லோங்குகரைபோனடுவி
னன்றாகச்சேர்ந்த குமிழ்நாசியு —மின்றாழ

13. வோங்குந்துகிரிரண்டி லொள்ளாரஞ்சேர்த்ததுபோற்
றாங்குநகைவாயாந்தனிமலரு —மேங்குதிரை

14. வேலைவிடமுண்டருளி விண்ணோரைக்காத்ததிரு
மாலைநிகர்நீலகண்ட மாணழகும் —பாலினும்வெண்

15. முந்நூலும்பட்டிகையு மூடுமணிமார்பழகு
மெந்நூலுமேத்து மிருகரத்திற் —பன்னூல்

16. பரவுமக்கமாலிகையும் பண்மழுவும்வேதச்
சிரமமருமாகமமுஞ் சேர்ந்து —திரமார்

17. சிவஞானபோதமுமச் செம்பொருளைத்தேற்றுந்
தவஞானமுத்திரையுஞ் சார்ந்தெம் —மவஞானம்

18. போக்குமிருகரமும் பொன்முதலாமூவாசை
யாக்குங்கொடிமீ ரரைஞாணுந் —தாக்குகின்ற

19. காரிருளைநீக்குங் கதிரந்திபோற்புலியி
னாதளைச்சேர்த்த வணியரையுஞ் —சூருடனே

20. பாய்ந்தடியார்தம்முயிரைப் பற்றுநமனாருயிரைக்
காய்ந்துதரிவீரக் கழலொலியு —மாய்ந்துமறை

21. சொன்னபொருளுணர்ந்தே சொல்லரியவானந்தம்
மன்னுமடியாரிதய மாமலரிற் —பொன்னொளியை

22. வீசிச்சிறந்த விரிகதிர்சேர்செம்மறைபோற்
றேசிற்சிறந்த திருவடியுங் —காசினியி

23. லெப்போதுஞ்சிந்தித் திருப்போர்களுள்ளமதிற்
றப்பேதுமில்லாத தண்ணளியாற் —கைப்போதின்

24. முப்பொருளினல்லியலு மோனமுத்திதன்னிலையுங்
கைப்பெருளிற்காட்டியருள் கண்ணுதலா —யெப்பொரு

25. சேர்ந்தகைலாயவரைத் தென்பாலெழுந்தருளித் [ளுஞ்
தேர்ந்தபரநந்திகுரு தேசிகருக் —கார்ந்தமறை

26. யாகமமாம்பாற்கடலை யாரருணமந்தரத்தால்
வேகமுடனேகடைந்து வெண்ணெயென —யோகமுறு

27. மத்துவிதமுத்தி யருள்ஞானபோதமெனுஞ்
சித்திதருநூலைத் தெரித்தருளிப் —பத்திதரும்

28. ஞானமுதனான்குமெமை நாடுநெறியென்றசிவ
மோனகுருதேவன் மொழிபோற்றி —யீனமுறும்

29. பாவநங்கிநாமுய்யப் பார்த்தருளுமெஞ்ஞானத்
தேவணந்திபாதத் திறம்போற்றித் —தேவனந்தி

30. தன்னருளேபோர்வையெனத் தாங்குசனற்குமரன்
பொன்னங்கழலின் பொடிபோற்றி —யன்னவன்ற

31. னூட்டமிகுஞ்சத்தியமார் ஞானதெரிசனிக
டாட்கமலப்பாதத் தளிர்போற்றி —நாட்டுமவன்

32. பாதமலர்சூடும் பரஞ்சோதிமாமுனிவன்
சீதமலர்ப்பாதத் திறம்போற்றிக் —காதலுடன்

33. அந்தமுனிவனா லருள்ஞானபோதமதைச் [ணெய்
செந்தமிழிற்சூத்திரமாய்ச்செய்தருளித் —தந்தவெண்

34. பொய்கண்டார்கெட்டாத பூரணமாஞ்சிற்சுகத்தின்
மெய்கண்டதேவன் விறல்போற்றி —மெய்கண்டான்

35. சித்தமுடனீந்த சிவஞானபோதமதை [யூர்
மெய்த்தமிழின்பாவான் விரித்தருளிச் —செய்த்துறை

36. சேர்ந்துசிவஞான சித்தியெனச்செய்தருளை
யார்ந்தவருணந்தி யடிபோற்றி —யார்ந்தவரு

37. ணந்திபதத்தாமரையே நாடியருட்கதியைச்
சந்திசெய்துநற்கடந்தைத் தண்ணகர்வாழ் —சிந்தியுக

38. ளம்பந்தந்தீர்த்தானு நாதமறைஞான
சம்பந்ததேசிகனற் றாள்போற்றிச் —சம்பந்தன்

39. வல்லையருள்செய்ததிரு வாய்மைநெறிகைக்கொண்டு
தில்லைநடராஜன் றிருவருளாற் —கொல்லைவளர்

40. காட்டமளித்தின்பமுத்தி காட்டென்றபெத்தாற்குத்
* தீட்டுந்திருமுகத்தைத் தேர்ந்தருளி —வாட்டம்,

41. முத்திநிலைதந்தாள் முதற்குருவாய்க்காசினியிற்
சித்திதருசாஸ்திரங்கள் செய்தருளி —நத்துமிகும்

42. கொற்றங்குடிவாழுங் கோவாமுமாபதிதன்
பற்றுமரைநேரும் பதம்போற்றி —மற்றவனுற்

$ { 43. றேயம்புகழ்ஞானஞ் சேர்ந்தவருணமச்சி
வாயகுருபாத வளம்பேற்றித் —தூயவரை

44. மங்கையைமெய்கொண்டோன்வாழ்ந்தருளுந்தென்காழிக்
கங்கைமெய்கண்டான் கழல்போற்றி —பங்கமமர்

45. குற்றம்பலநினைந்து கோலும்பழுதைகட்டிச்
சிற்றம்பலகுரவன் சீர்போற்றி —மற்றவனை

46. நாடிக்காளத்திவளர் ஞானப்பிரகாசனருள்
கூடியவர்பாதக் குணம்போற்றித் —தேடிவரும்

47. ஞானிக்கருள்கமலை ஞானப்பிரகாசகுரு
தேனிக்கருளின் றிறம்போற்றி —வானிற்கும்

---

* அடியார்க்கெளியன் சிற்றம்பலவன்கொற்றங்
குடியார்க்கெழுதியகைச் சீட்டுப்—படியின்மேற்
பெத்தான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்கைசெய்து
முத்திகொடுக்க முறை.

$ இவ்வாசிரியர் செட்டித்திருமேனியாய் மச்சுகட்டி அதில் வசித்துக்கொண்டிருந்தபடியால் மச்சுச்செட்டியாரென்று காரணப்பெயராற் கூறுவருமுளர்.

48. ஞானப்பிரகாசனெனு நற்கடலின்ஞானமெனும்
வானப்பயமுண்டு மாமலமாங் —கானலினல்

49. வாடுமடியாருயிராம் வான்பயிரிற்பெய்தருளைக்
கூடும்படியருளுங் கொண்டலாய்க் —காடுதனின்

50. மன்னுங்கிளிபூவை வாளரவஞ்செம்போத்து
மின்னுங்குயிலெலியுமேலான —பொன்னுரத்தி

51. லாரமகிழ்மாலு மறியாதவான்கதியி
சேரவருளுக்கவருந்தேசிகனுய்ப் —பாரறவோர்

52. சேர்தருமைவாழுந் திருஞானசம்பந்த
வேர்குரவன் பாதவிணைபோற்றி —யார்தருமா

43. னந்தபரவசன்று ணுளுந்துதியடியார்
தந்தவருளின் றகைபோற்றி —யந்தகுரு

54. வுச்சிதானந்தபத முன்னியருங்கதிவாழ்
சச்சிதானந்தகுரு தாள்போற்றித் —துச்சிலென

55. வங்கம்வெறுத்தே யடைந்த குமரகுருத்
துங்கமுனிவன் றுகளறுத்துச் —சங்கையறு

56. முத்திநிலைதந்தாண் முதன்மாசிலாமணிதன்
சுத்திதரும்பாதத் துகள்போற்றி —யெத்திசையுங்

57. தங்கும் புகழ்ஞான சம்பந்ததேசிகன்றாட்
பொங்குவகமலப் பொடிபோற்றிச் —சங்கமதிற்

58. சேர்ந்த தமிழ்தேர்ந்த திருஞானசம்பந்த
னூர்ந்தகுருபாத வணிபோற்றி —சார்ந்தபவஞ்

59. சேருவகைதீர்த்தா டிருவம்பலகுரவன்
காரணி நிகர்பாதக் கனம்போற்றி —நாருறமெய்ப்

60. பார்த்த திருச்சிற்றம்பலகுரவனம்வினையைத்
தீர்த்தபதத்தாமரையின் சீர்போற்றி —ஆர்த்தவினை

61. தீர்த்ததிருநாவுக் கரசகுருதேவனெழில்
ஆர்த்த பதத்தினருள்போற்றித் —தீர்த்தமிகும்

62. வேள்விமலைவாழும் வேலனருளான் வள்ளி
வாள்சிரத்தைக் காட்டும் வழியாகக் —கேள்விசெய்து

63. சீர்த்திபெறுந் தேவாஞ் சிவஞானதேசிகனார்
நேர்த்திபெறும்பாத நிறம்போற்றிக் —கீர்த்திபெறுங்

64. தேர்ந்த சச்சிதானந்த தேசிகன்றனெந்நாளுஞ்
சேர்ந்தவர்கள் பாதத் திறம்போற்றி —யார்ந்தவருள்

65. முத்துக்குமார முதற்குரவன்றண்முடியின்
வைத்தவர்கள் பாதவளம்போற்றிச் —சித்துமிகு

66. மார்க்க முணர்ந் துண்மைநெறி வாழ்ஞானசம்பந்தன்
நீர்க்கமரைப்பாதத்திறம்போற்றிக் —கார்க்குலங்கள்

67. வீசிமழைபொழிய வேண்டவருள்கந்தப்ப
தேசிகனார்பாதத் திறம்போற்றி —யாசுமுத

68. நூற்கவியும்பாடு நலமாசிலாமணிதன்
மாற்கரியபாத வயம்போற்றிக் —காற்கறுத்த

69. மாதவர்கள் சூழ்ந்து பணிமா சச்சிதானந்த
போதகுருபாதப் புகழ்போற்றி —நாதனெனு

70. மாணிக்கவாசகன்றாள் வாழ்த்துமுனிவோர்பாதக்
காணிக்கைசேருங் கழல்போற்றிச் —சேணிலகும்

71. வானவரு மாலயனும் வாழ்த்தரிய பாதமலர்
ஈனமலததேற்கு மெளிதாக —வானருளாற்

72. பூமிதனிற்றேயப் புகழார் தருமையெனு
நாமநகர்மேவி நான்மறைதோ —பூமனுநல்

73. லன்னவுருவாகி யறியாதமாமுடியிற் [றமார்
சொன்னவொளிசேருந் தூய்ச்சடையும் —பொன்னி

74. தாமரையை நேர்ந்திருத் தண்முகமு நெற்றிதனிற்
காமரொளியார் நீற்றின் சட்டழகும் —மாமலத்தை

75. நீக்கவருநமக்கு நெற்றிவிழியேனின்று
போக்கவணி சந்தனத்தின் பொட்டழகு—நோக்கமுறத்

76. தங்கழலைச் சார்ந்தோர்கள் சஞ்சிதத்தைப்போக்கியரு
ளெங்கவிழியின் றணையழகும் —பொககுமறைச்

77. செந்தாமரை யூறுஞ் செந்தேனெனும்பொருளை
நந்தாதவரளிக ணாடியுணச் —சிந்தாது

78. பொம்மலுறப்பெய்யும் பொருவரியசெங்குவளைச்
செம்மலரைநேருந் திருவாயும் —நம்முடைய

79. சித்தமெனுங்குமுதஞ் செம்மலுறவாள்வீசு
முத்தநிகரும்பன் முகையழகும் —தத்தையுறும்

80. வானவரைக்காத்த வயமெனினும்வல்விடத்தை
யீனமென்னீக்கு மியற்களமும் —வானவர்கள்

81. ஒண்மணியைப்பூண்டே யுயர்வுகெட்டாரென்றுநகை
கண்மணியைப்பூண்ட கவின்மார்பும் —புண்மலத்தை

82. நீக்கக்கருதுகின்ற நீடவர்களின் நூலைப்
பார்க்கப்பறையுமெனும் பான்மையுற —நோக்குசிவஞ்

83. சேர்ஞானபோதகநூல் சேர்ந்தெமதுபாவவினை
யார்ஞானநீக்கி யருள்கரமு —மேர்ஞானஞ்

84. சேருஞ்சரியைமுதற் செந்நெறிகணான்குமெய்மை
தேருநெறியாமிறுதி சேர்ஞானந் —தேருமெமை

85. ஒன்றுமிரண்டுமற வொன்றுமுத்திதந்தருளு
மென்றுணர்த்துஞ்சின்முத் திரைக்கரமும்-பொன்றியழி

86. புல்லாடைசேர்ந்தல் புகவெல்றதைநீக்கிக்
கல்லாடைசேர்த்த கவினையு —நல்லராய்த்

87. தேறுந்தவரிதயச் செந்தாமரையொளிபேர
லேறியமரு மிருபதமுங் —கூறரிய

88. தேசுமிகுவெண்ணீறு சேர்ந்ததிரிபுண்டரமார்
பேசரியமேனிப் பொலிவழகு —நேசமுடன்

89. கொண்டெழுந்துநாயேன் குறைமலஞ்சுடர்த்தாளு
மண்டருளிற்பேரின்பம் வாய்த்திடவே-தொண்டருடன்

90. கூட்டியெனதுமலக் கோளறவேபார்வையினால்
வாட்டியருள்வாய்க்கும் வழியருளித் —தாட்டிகமாய்

91. முத்திதருமஞ்செழுத்தும் மூலமதன்பொருளுஞ்
சுத்தியுறநெஞ்சழுத்தி சோகமற —வெத்தனையும்

92. வென்றுவருங்காலனையும் வெல்லுமனுவோதி
என்றுமிருக்கு மிருநெறியு —நன்றுறநல்

93. ஆறெழுத்துங்கூறி யடியேனுடல்பொருளுங்
கூறுமுயிருமுடன். கொள்ளைகொண்டு —பேறரிய

94. போதமிலேன்புன்றலையிற் பொன்னார்மரையைநிகர்
பாதமலர்சூட்டியருட் பண்புமிகப் —பேதமிலா

95. வெண்ணீறுங்கண்டிகையு மேயசிவவேடமுமே
திண்ணேயஞ்செய்யுந் திடமென்றே —பண்ணீடும்

96. பாதமலைநீரும் பரிகலத்தின் சேடமுமெற்
காதரவிற்ருய்போ லளித்தருளிச் —சிதாரனுஞ்

97. சேர்ந்தறிபாவான்கதியிற் சேர்ந்தென்னையாண்டருளித்
தேர்ந்தசிவஞான தேசிகன்ரு —ளோர்ந்துதினம்

98. முப்போதுநற்போதின் மூடியகப்போதின்
வைப்போர்கள்பாத வளம்போற்றி —யெப்போதும்

99. பாசப்பிணியும் பருப்பிணியுமாதர்கட்
நேசப்பிணியு கிலம்பொருளி —ஞாசையுகன்

100. மாலயனும்வாசவனும் வாழும்பெரும்பதவி
மேலமரும்வாட்கை விருப்பமுங் —காலனெனு

101. மூர்க்கனுடன்பாசமூனைப்பகையுமேழ்பவமாங்
கார்க்கடலின்வீழுங் கருவுருவுந் —தீர்க்கமுறு

102. மெய்யருளானீங்கி விளங்குஞ்சரியைமுதற்
செய்யநெறிநான்கின் றிறனறிந்து —வையமதிற்

103. செந்நூலெனச்சேர் சிவஞானபோதமெனு
மெய்ந்நூலினுண்மை விளைவுணர்ந்தே —யன்னூலி

104. னோர்ந்தசிவஞானத்தா னெஞ்சமதிற்பற்றறுத்துத்
தேர்ந்தசிவநிட்டை தினம்புரிந்தே —யார்ந்துவரு

105. நின்மலஞானத்தா னிகழ்ந்தசிவபோகமதிற்
சின்மயமாய்வாழ்ந்துந் தினம்.

போற்றிக்கலிவெண்பா

முற்றிற்று.

உ

சிவமயம்.

குருபாதந்துணை.

# திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனம் பிரதமாசாரியராகிய ஞானசம்பந்ததேசிகர்மாலை

## நூற்சொன்னகாரணம்.

திருவளர்பனைசைச்சாமிநாதப்பேர் செய்முனிதன்னருளாலே
கருவளரடியேனகத்திருணீக்குக் கல்வியாமணி விளக்கேற்றத்
தருவளர் தருமைவாழ்திருஞானசம்பந்தேசிகன்சீரைப்
பெருவளர்மாலையென சொன்னதன்றிப் பேதையேனுரைத்
[திருந்தசுகத்தோ.

மாயூரம் வித்துவான்

முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் இயற்றியது.

திருவாருந்தருமைநகர்வாழ்ஞானசம்பந்தேசிகன்றாட்
குருவாருந்தமிழ்மாலைசண்முகசாமிகளியற்றியுவந்தன்போடு
மருவாரும்பனைசைநகர்வாழ்சாமிநாதமுனிவரபிரானுர்
தருவாருஞ்சபையிலரங்கேற்றிமகிழ்ந்தான் தன்றன்றகைமை
[யோர்ந்து.

திருவளருமொருவேலன் குடிநகரில்மர்ந்தென்றுஞ் செழித்து
வாழ்வோன், குருவளருக் கல்வியறிவொழுக்கமெலாமோருரு
வாய்க் கொண்டசீலன், மருவளருமுனைசாமி துரைசாமிமகி
பாலன்மகிழ்ந்தச்சிட்டுக், கருவளருமுலகமதிற்பரவச்செய்தான்
புகழைக்கழறற்பாற்றோ.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருபாதந்துணை.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனம்

பிரதமாசாரியராகிய

# ஞானசம்பந்ததேசிகர்மாலை.

---

விநாயகர் காப்பு—வெண்பா.

தென்றருமைவாழுந்திருஞானசம்பந்த
மன்றருமைச்சீரோதுமாலைதனக்—கின்றருமைக்
சந்தரனுக்கின்பருளுங் காதலனுநாகமுகச்
சுந்தரனற்றாளே துணை.

## கட்டளைக்கலித்துறை.

1. பேரார்தருமைக்குருகேனமாகப்பெரிதலைந்து
காரார்தருமைத்திருமாலயனுங்காணரிய
வேரார்தருமையடியடியேன்றலையேத்தவைப்பாய்
சீரார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

2. விண்ணாருந்தேவர்முனிவோராயாண்டுவிளங்குமையின்
கண்ணாருமேனிமழுமான்கரந்துமெய்க்காதலொடு
மண்ணாருமெங்கண்மலமாற்றியாண்டிடவந்தருள்வோய்
திண்ணார்தருமைத் திருஞானசம்பந்ததேசிகனே.

3, பாலாவெனுமொழிமங்கையர்மாயப்படுவலையின்
மாலாய்விழுந்துமயங்குகின்றேனைநின்மன்னருளாங்
காலாலெழுப்பிமலக்களைதீர்த்துன்கழலருள்வாய்
சீலாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

4. முத்தாருங்கொங்கையுமானேருங்கண்ணுமுகமுங்கொ
பித்தாரநெஞ்சமெதிரேவருகின்றபேதையரை [ண்டு
நத்தாதசிந்தையும்பாராதகண்ணுநயந்தளிப்பாய்
சித்தாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

5. காடேட்டிரிந்திலைகாயருந்தித்தவங்காக்கிலென்ன
வீடேதருநின்னடித்தாமரைமலர்வேண்டுகில்லார்
தோடேயுங்காதணிமங்கையர்மாடத்தொகுதிகள்போய்
தேடேய்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

6. பாவோடுனைத் துதித்தானந்தக்கூத்துப்பயிலுந்தொண்
நாவோடவரகராண்மலரன்றிமெய்க்கான்முகற்றுந் [டர்
தூவோடுனைத் துதித்தானந்தமேவுந்தொழிலுறுமோ
தேவேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

7. கன்னுருடன்செயும்பாமாலைசூடேன்னுவலலைப்
பன்னுதபேரின்பவீடாளச்செய்யும்பதாம்புயனே
யென்னுகமாவிபொருண்மூன்றுமேற்றெனக்கின்பருள்
தென்னுதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே. [வாய்

8. வேதாந்தமாயப்படுகுழிவீழும்பொய்வேதியர்கள்
நாதாந்தமாகுன்றிருவடித்தாமரைநண்ணுவரோ
தாதார்ந்தகொங்கையரமாதராடுஞ்சதிராங்கு
சேதாந்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

9. அளிமேயபொருந்துமுகத்தாமரையுமலர்ப்பதமுங்
களிமேயபொருந்துந்திருஞானங்காட்டுங்கரதலமு
நளியேயபொருந்துங்கடைநோக்குமென்னகாட்டருளி
றெளிவேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

10. பந்தேயெனுந்தனத்தார்நகைதீரப்பரிந்தடியின்
வந்தேயுந்தொண்டர்க்கருண்ஞானமூட்டிடும்வண்கரமு
மிந்தேயெனுமுகங்கொண்டடியேனுள்ளெழுங்கருணைச்
சிந்தேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

11. அட்டாதசமுமறைநான்குந்தேடியளந்தறிய [ன்
தெட்டாப்பொருளேயெனத்துதித்தேங்கவிருவினையி
கட்டாலலைந்துகலங்குகின்றேனுக்குன்காட்சிதந்தாய்
சிட்டாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

12. மருளேகுடிகொண்மலமாயைகன்மமயக்கமிழ்ந்தி
யிருளேகுடிகொளடியேனகத்திலெழுந்தருளிப்
பேருளேயமரும்பதிஞானங்காட்டிப் புரந்தருணற்
றெருளேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

13. வல்லைபுரையுந்தனத்தியராசைமயக்கலைந்து
கல்லைபுரையுங்கடையேனகத்திற்கருணையென்னும்
வில்லையும்போதமழையூற்றிப்போகம்விளைத்திடுநற்
செல்லைதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

14. நவ்வாதியாருமலமாயைநீக்கிநவிற்றிடுநற்
சிவ்வாதியாகச்செபிக்கின்றமாதவர்சிந்தைதனிற்
றுவ்வாதுமாயைதுணித்தாளுஞானச்சுரிகையுடங்
தெவ்வாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

15. இனக்கும்பல்கூடிநரிஞாளிதங்களிரையெனவுண்
கனக்கும்பொதிசோறெனுங்காயத்தாசைக்கடன்மதத்தா
வனக்குஞ்சரத்திற்பிரியாதருளலர்வாண்மதனைச் [ல்
சினக்குந்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே,

16. சலையாசமத்தினினற்பொருளாகுநின்காலிணையே
நிலையாகுமென்றுமலர்தூவியேத்துநிருமலமாந்
தலையாகுமன்பர்க்கருண்ஞானயோகந்தருஞ்சிகரிச்
சிலையாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

17. நகையான்மயக்குமுலைமாதராசைநடுக்கடலிற்
றிகையாவருந்துமெளியேனையாளத்திருவருளாற்
றகையாருநின்றனடித்தோணியீந்தருடாங்குகங்கைச்
சிகையாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

18. சன்றேயெனநின்னருளாமமுதைக்கருதிநித
நின்றேகதறுமெளியேற்கிரங்கிநிகராறுமா
னன்றேதருகின்றபால்கோலருளருணற்றவரைச்
சென்றுடருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

19. பல்வாதத்தான்மிகுநல்லோரைநிந்திக்கும்பாவிகள்பாற்
செல்லாதுநின்றனடித்தாமரைசடினமுவந்து
நல்வாசத்தூபமொடுபோற்றுநின்னலமருள்வாய்
செல்வாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

20. ஏணுறம்பொருளின்பமும்வீடுமெனும்பயனிற்
காணுதவீடுந்தன்றுளுமொன்றேயெனக்காட்டுமுண்மை
நாணுளிலகுசின்முத்திரையோடகநாடவருள்
சேணார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

21. ஊனாருமிந்தவுடனீக்கியோங்குமுனதருளாம்
வானாருமேனிதனையீந்துபேரின்புவாய்த்திடகான்
மூனாருமுத்திப்பயனீந்தருட்டருத்தாங்கலர்வாழ்
தேனார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

22. தறியேயெனநின்றன்றாண்மலர்போற்றுந்தவர்கட்மை
குறியேன்கனவிலுமானந்தமாமுன்குலமலர்த்தா [க்
ளறியேனெனினுமெனையாண்டுமோக்கமருள்கருணைச்
செறிவேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

23 பாவாய்ப்பொழிந்தமறைநாவின்வேந்தன்பருங்கடலை
காவாப்பயக்குன்றிருநாமமோதிக்கடந்திடயான்
பூவாய்த்துதித்தும்பவக்கடல்வீழும்புதமையென்னோ
சேவாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

24. கங்காருமிந்தவுடலோம்புமாசைக்கருத்திலுறக்
கொங்காருநல்லவமுதூட்டிவாடுங்குறைதவிராய்
சங்காரும்வாசமரைசூழுஞ்செய்யிற்சரிகுலைவீழ்
தெங்கார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

25. ஆலூருங்காஞ்சிநகர்சேலங்கண்ணியறவிடுத்துக்
காலூரும்வாசத்திருக்கஞ்சனூருங்கழல்வணங்கு
மாலூருங்கூடற்கமலையும்வாழுறவந்ததென்னே
தேலூர்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

26. மின்னேயங்கொள்ளுமடமாதராசைவெறும்வழியிற்
பொன்னேதருமென்றனஞ்ஞானமோட்டுன்பொலங்க
றன்னேரறுமன்புதந்தருள்வாய்திருத்தாபதர்சூழ்[ழலிற்
தென்னேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

27. ஆசாருமும்மலக்கோளறுத்தானந்தமாகநின்றன்
வீசார்புகழைத்தினமோதஞானம்விரைந்தருள்வாய்
மூசார்பலவையுங்கண்டையும்போலமுதிர்ந்தவருட்
டேசாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

. பொய்யேமிகுந்ததனுகரணாதிகள்போகமதிற்
கைய்யேமிகுந்தருட்டன்கழல்சேருமெய்க்காதலற்கு
மெய்யேமிகுந்திநற்சிவபோகம்விளைத்தருணற்
செய்யேதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

29. கயமாருமும்மலப்பேய்மிகவாணணைசக்கானகத்திற்
பயமார்தரநின்றுவாடுகின்றேனுக்குன்பாதமெனும்
நயமார்துணைதந்துபேரின்பவீட்டையுநல்கிவோய்
செயமார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

30. கண்ணாகிக்கண்ணுண்மணியாகிக்காட்டுங்கதிரொளிபார்
விண்ணாகித்தேயுவளியாகியெங்கும்விளங்கியக
மெண்ணாமுனேகியடியாரைக்காக்கவெழுங்கருணைத்
திண்ணாதருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

31. திருவார்சைலப்பதிவாழ்கவப்பதிசேருநின்றன்
மருவார்மரபுந்திருநீறுங்கண்டியும்வாழ்கவருட்
சூரிவாகுநின்றன்றிருக்கூட்டம்வாழ்கநற்கோநிரைக
பெருவாழ்தருமைத்திருஞானசம்பந்ததேசிகனே.

32. சீரார்தருமைத்திருஞானசம்பந்ததேசிகன்றன்
போருமாலைதினமோதுநல்லபெருந்தவத்தோர்
காராருமாயைப்பகைநீக்கித்தூயகதியருளும்
மேரார்தருமெம்பெருமானடியிணையெய்துவரே.

ஞானசம்பந்ததேசிகர்மாலை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

குருபாதந் துணை.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனம்

பிரதமாசாரியராகிய

ஸ்ரீமத் ஞானசம்பந்ததேசிகர் மேற்பாடிய

# அகப்பொருள் நவமணிக்கோவை.

# சாற்றுகவி.

நாகபட்டணம் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்
நாகை நீலலோசனிப் பத்திராதிபருமாகிய மகா-௱-ஸ்ரீ
ஜி, சதாசிவம்பிள்ளையவர்கள் கூறியது.

பன்னூலுங்கணப்பொழுதிற்சுவையொழுகு சொற்பொருளாற் பாடவல்லான்
என்னூலும்பற்பலர்தமுளங்களிக்கவெடுத்துரைக்கு மேற்றமுள்ளான்
முன்னூலின்பொருடேர்ந்தசண்முகமாமுனிவரன்மூதறிவிற்சொற்ற
நன்னூலாமகப்பொருள்நன் நவமணிக்கோவைக்குவமை நவிர்வார்யாரே.



உ

திருச்சிற்றம்பலம்.

குருபாதந்துணை.

திருக்கைலாயபரம்பரைத் தருமபுரவாதீனம்

பிரதமாசாரியராகி

ஸ்ரீமத் ஞானசம்பந்ததேசிகர்மேற்பாடிய

# அகப்பொருள் நவமணிக்கோவை.

விநாயகர் காப்பு—கலித்துறை.

பூவாற்றிகழுந் தடஞ்சூழ் தருமைப் புரிதனில்வான்
காவாய்ப் பயக்குங் குருஞானசம்பந்த காவலன்சீர்
பாவாய்த்தொடுக்கு நவமணிக்கோவையைப்பாடிடநற்
றாவாக்கருளுந்தமிழ்போற்றுந்தும்பியின் றாய்ப்பதமே.

## நூல்—காட்சி.

1\. தெங்குங்கமுகுந் திகழ்தருமாபுரித் தென்னகரிற்
சங்கும்புகழ வருள்ஞானசம்பந்தன் றாழ்வரையிற்
கொங்குங்குமிழுநன் முல்லையுநீலக் குளிர்மலையுங் [ரிதே
தங்குங்கொடிபோன் றொளிர்கின்றதொன்றதைச்சாற்ற

## ஐயம்.

2\. நத்துங்கமலமும் வாவியுஞ்சூழு நளிர்தருமைக்
கத்தனணியும்புகழுஞானசம்பந்தன் றாள்வரையிற் [றரிவை
றொருத்துங்குவளையுஞ்சேர்கொடிபோன்றென்முன்றோ
நத்துங்கமலத்திருவோர்வறிபணிந்நாணிலத்தே.

## தெளிதல்.

3\. தேமாதுவாழுந்தருமையர் கோன்செய்யதேவர்புகழ்
நாமாதுமேவிப்புகழ்ஞான சம்பந்தனார்வரையிற்
பூமாதெனத்திகழ் பூவையர்பாதமிப்பூவுறலாற்
காமாதயன்செய்தவத்தாலெனக் கருள்காரிகையே.

## புணர்ச்சிவேண்டல்.

தென்னேபொருந்துமறைபோற்றிருவும் திகழ்தருமைத்
தன்னேரிலாத திருஞானசம்பந்தன்சார்வரையிற் [ன்
பொன்னேயினைதுதிருக்கூடல்வேண்டிப் புகுந்தனன்யா
இன்னேயதனைத்தரவேண்டுமென்னுயிரேந்திழையே.

நாணிக்கண்புதைத்தல்.

நறைபூத்தகொன்றையு நாகமுஞ்சூடிநஞ்சடையோன்
நிறைபூத்தவின்னருள்சேர்ஞானசம்பந்தனின்குரவன் [றித்
துறைபூத்தமின்னற்கொடியேதற்பொற்குடந்தாங்கலின்
கறைபூத்தவேலேற்கையேந்தனிற்குக்கருணையன்றே

புணர்ச்சிக்குடன்படல்.

த்தந்திகழுமலர்ச்சோலைசூழ்ந்துகமழ்தருமை
ந்தெம்பணிகொ டிருஞானசம்பந்தன்வாழ்விலா
ந்திந்திகழுந்திருநோக்கவென் னிருவேழம்வென்றார்
சாந்தம்மினைக்கென்றிருக்கூடலென்றவன்சொற்றனனே

கலவியைப்புகழ்தல்.

விண்ணாடர்போற்றும்விரைக்கொன்றைசூடும் வியன்சரு
டண்ணாமாகப்பெறுஞானசம்பந்தன்சார்வரையிற் [ட்
கண்ணாருமெற்றிக்கனியீந்தருள் சுகன்கண்டிலரே
பண்ணாருமுத்தியைப் பேரின்பமென்றுரைப்பாடுவரே.

பிரியாமையுணர்த்தல்.

நவமணிமாலைதனைத் தமிழார்ப்புனைநாவலர்க்குச்
சிவமணிமாலைதந்தான்ஞானசம்பந்தன்சீர்வரையிற் [யீ
றவமணிமாலையைப்போலெனைச் சேர்ந்தநற்றையனல்லா
அவமணிமாலையைச்சேர்ந்தாலு நிற்பிரிந்தாற்றலனே.

## தெய்வம்வாழ்த்தல்.

9. கந்தனைந்தந்தநற்செய்யார்தருமையுநாணிலத்தோர்
வந்தனஞ்சந்ததஞ்செய்ஞான சம்பந்தவான்குருவும்
அந்தனந்தந்திடைக்கொண்ணங்கைநீயுநின்னூர்வரனைத்
தந்தனைத்தெய்வமும்நீடுழிவாழ்கவித்தாரணியே.

---

அகப்பொருள் நவமணிக்கோவை
முற்றிற்று.